[1983 பிப்ரவரி 15

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தியாவிலே வாழ்கிற மக்களுக்குப் பரப்புகிற வகையில், அவர்கள் புரிந்துகொள்கிற வகையில், ஆங்கிலத்தில் தயாரித்தாலே போதும் என்று அரசு கருதுகிறது. மத்திய சுற்றுலாத் துறை வேண்டுமானால் இந்தியாவிலே இருக்கிற சிறப்புகளை எடுத்துச் சொல்கிற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியிலே தயாரிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசுக்கு அவர்களுடைய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் இந்த யோசனையைத் தெரிவித்தால் தமிழகத்திற்கும் பயன் உள்ளதாக அமையும்.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் திட்டம்

*வினா எண். 287—திரு. து. புருஷோத்தமன், மற்றும் திரு. பெ, சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி இப்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பது பற்றிய ஒரு அறிக்கை தருவதற்காக நிபுணர் குழு ஒன்று பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. நிபுணர் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று, அறிக்கையினுடைய விவரங்களைப் பற்றி அரசு மேல் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் நம்முடைய புலவர் திருவள்ளுவருடைய சிலையைத் திறப்பது பற்றி எதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது? இடம் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகவா ? அல்லது வேறு எந்த காரணத்திற்காக அந்தக் குழு அமைக்கப்பட்டது ? எப்பொழுது அமைக்கப்பட்டது ? எந்த அடிப்படையிலே அவர்கள் ஆய்வு செய்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா ?

1983 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தக் காரணத்திற்காக குழு அமைக்கப்பெற்றது என்கிற விவரத்தை எல்லாம், இந்த அவையிலேயே நான் முன்னாலேயே சில கேள்விகளுக்குப் பதிலாக அளித்திருக்கிறேன். ஆனால், மீண்டும் அதைத் தெரிவிக்கிறேன். அங்கே அமைக்கப்பட இருக்கிற திருவள்ளுவர் சிலை என்பது 75 அடி உயரத்திலே அமைக்கப்பட வேண்டுமென்கிற ஒரு மிகப் பெரிய திட்டமாக முதன்முதலிலே இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்படுகிற சிலை கல்லிலே அமைவதா? வெண்கலத்திலே செய்வதா? அல்லது செப்பிலே செய்வதா? என்பது போன்ற விவரங்களும் அது ஏறக்குறைய ரூ. 4 கோடிக்கு மேல் திட்டமிட்டு செலவு செய்யப்பட வேண்டிய திட்டமாக இருக்கிற காரணத்தாலும் அது கடலோரத்திலே அமைக்கப்படுகிற காரணத்தினாலும், பாறையின் மேலே அமைக்கப்படுகிற காரணத்தினாலும் நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பாக அவைகளை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் அறிந்து ஆராய்ச்சி செய்து அரசுக்கு அறிக்கை தருவதற்காக இந்தக் குழு அமைக்கப்பெற்றது. அது கடந்த ஆண்டிலே அமைக்கப்பட்டு, அவர்களுடைய அறிக்கை இப்பொழுது அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குத் தரப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அப்படியானால் அந்த அறிக்கையிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? சிலை அமைப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் நினைக்கின்றார்கள்? அது அமைத்து முடிய எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, அந்தக் குழு இப்படி மூன்று விதமான சிலைகளை அமைப்பதற்கு எப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், எந்த அளவிற்கு நிதி செலவாகும், எந்தச் சிலையை வைத்தால் என்னென்ன பின் விளைவுகள் ஏற்படும் என்பது பற்றியெல்லாம் ஒரு நீண்ட அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அதைப் பற்றிப் பரிசீலித்து இறுதியான வடிவத்தினைப் பெறுவதற்காகத் தலைமைச் செயலாளர் தலைமையிலே நிர்வாக அலுவலர்களைக் கூட்டி அதைப்பற்றி கருத்துக்களை அரசுக்குக் வழங்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த முடிவு தெரிந்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குத் தெளிவான, இறுதியான விடையை அளிக்க முடியும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி மூலம் தென் சென்னையிலே மைலாப்பூரில் திருவள்ளுவருக்குப் பெரிய சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையைச் சுற்றி இருக்கின்ற இடத்தைப் பார்க்கின்ற பொழுது மிகவும் அருவருப்பாகக் காட்சி அளிக்கிறது. ஆகவே, திருவள்ளுவர் சிலையைச் சுற்றியுள்ள அந்த இடத்தில் நல்ல பூங்காவை அமைத்து அதை நல்ல இடமாக அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ஆர்.எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கேள்வி கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பதைப் பற்றியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாக இந்தக் கேள்வியைத் தருவார்களேயானால் அதற்குரிய துறையினிடத்திலேயிருந்து விரிவான பதில் அவர்களுக்குக் கிடைக்கும்.

வேலூர் நகரில் 1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரசுப் பொருட்காட்சி

*வினா எண். 288—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு வேலூர் நகரில் 1982 ஆம் ஆண்டு சுற்றுலா வாரியம் மூலம் பொருட்காட்சி அமைக்கப்பட்டதற்கான செலவு எவ்வளவு ?

(ஆ) எந்த அடிப்படையில் அங்காடிகள் வாடகைக்கு விடப்பட்டன ?

(இ) அதன் மூலம் கிடைத்த வசூல் எவ்வளவு ?

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன் : (அ) வட ஆற்காடு வேலூர் நகரில் முதன் முறையாக 1982 ஆம் ஆண்டு செய்தி துறையின் சார்பாக அரசுப் பொருட்காட்சி நடத்தியதற்கு ரூபாய் 6.22 லட்சம் செலவு செய்யப்பட்டது.

(ஆ) பொது ஏல முறையில் அங்காடிகள் வாடகைக்கு விடப்பட்டன.

(இ) அங்காடிகள் வாடகை மூலம் ரூ. 75,000 கிடைத்தது. இந்த பொருட்காட்சி நடத்தியதின் மூலம் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 10·72 இலட்சம்.